# ஆளுநர் ஆர்.என்.ரவி வரலாறு தெரியாமல் பேசுகிறார்

# திராவிடம்-ஆரியம் பற்றி வரலாற்றில் ஆழமாகவும் அழுத்தமாகவும் பதிவுகள் உள்ளன!

## ‘சன் நியூஸ்’ தொலைக்காட்சி விவாதத்தில் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் விளக்கம்!

**சென்னை, அக்.27-**

**திராவிடம் - ஆரியம் பற்றி வரலாற்று நூல்களில் ஆழமாகவும் அழுத்தமாகவும் பதிவுகள் உள்ளன; ஆளுநர் ரவி வரலாறு தெரியாமல் பேசுகிறார் என்று திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுச்செயலாளர் சுப.வீரபாண்டியன் விளக்கமாக குறிப்பிட்டுள்ளார்.**

‘சன் நியூஸ்’ தொலைக்காட்சியில் மு.குணசேகரனை நெறியாளராகக் கொண்டு , “ஆளுநர் ரவியை விமர்சிக்க தயக்கம் காட்டும் இ.பி.எஸ். திராவிடத்தை ஆதரிக்க அச்சமா?” என்ற தலைப்பு கொண்டு நடைபெற்ற ‘கேள்விக் களம்’ விவாதத்தில் திராவிடர் இயக்க தமிழர் பேரவை பொதுச்செயலாளர் சுப. வீரபாண்டியன் அவர்கள் பேட்டியளித்தார்.




**நெறியாளர் மு.குணசேகரன்:** ஆளுநர் ஆர்.என். ரவி தொடங்கி வைத்த ஒரு சர்ச்சை என்பது பல பரிமாணங்களில் பேசப்பட்டு வருகிறது. ஆளுநருடைய பேச்சை நீங்கள் எப்படி புரிந்து கொள்கிறீர்கள்?

**பேராசிரியர் சுப.வீரபாண்டியன்:** ஆளுநர் அவர்கள் எதையாவது பேசிவிட்டு நம் எல்லோருடைய நேரத்தையும் வீணாக்குகிறார் என்பது தான் என்னுடைய முதல் பார்வை. ஒரு விவாதத்திற்குரிய பொருளே இது இல்லை என்று நான் கருதுகிறேன். ‘ஆரியம் திராவிடம் என்று எதுவுமில்லை, ஆங்கிலேயர்கள் அதை உருவாக்கினார்கள். ராபர்ட் கால்டுவெல் அதைச் சொன்னார்’ என்று சொல்வதெல்லாம் மீண்டும், மீண்டும் அவர் ஐ.பி.எஸ்.படித்து இருக்கிறாரா? என்கின்ற ஐயத்தை எனக்குள் உருவாக்குகிறது.

எடப்பாடி நேரடியாகச் சொன்னதைப் போல ‘எனக்கு ஒன்றும் தெரியாது’ என்றாவது சொல்லிவிட்டுப் போக வேண்டும். இரண்டு பேரையும் நான் எப்படிப் பார்க்கிறேன் என்றால், எடப்பாடி ‘எதுவும் தெரியாது’ என்கிறார். இவர் தெரிந்தது போல பேசுகிறார்.

beware of false knowledge என்று பெர்னாட்ஷா சொல்கிறார் it is more danger ous than ignorance. அதாவது அறியாமையை விட இந்த தவறான அறிவு என்பது ஆபத்தானது, beware of false knowledge என்று படித்தது தான் என் நினைவுக்கு வந்தது. நான் இப்படி சொல்லி விடுகிறேன். ஆரியம் திராவிடம் என்பதெல்லாம் வெறும் கட்டுக் கதை என்று சொன்னால், பாரதியாரிடமிருந்து தொடங்குவதா? இல்லை குறுந்தொகையில் இருந்து வருவதா என்று எனக்குத் தெரியவில்லை. பாரதியார் எத்தனை இடங்களில், தேசிய கீதங்களில் மட்டும் 24 இடங்களில் ‘ஆரிய’ என்கிற சொல்லை பயன்படுத்தி இருக்கிறார். ஆரிய பூமியில் நாரியரும் நர சூரியரும் சொலும் வீரிய வாசகம் எனும் பாடலில் வந்தே மாதரம் ஜெய வந்தே மாதரம் என்கிறார். ஆரியர்கள் வந்தே மாதரம் என்று சொல்வார்கள் என்கிறார். 24 இடங்களில் இது இருக்கிறது.

சோழர்கள் காலத்து கல்வெட்டில் இருக்கிறது. சோழர்களுடைய பாணியர்கள் கல்வெட்டில் தமிழ் பாடியோர் நால்வர், ஆரியம்பாடியோர் மூவர் என்று கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்னமும் பின்னால் திரும்பிப் பார்க்கிறேன், குறுந்தொகையில் ஏழாவது பாடல், பெரும் பதும்பனார் என்பவர் எழுதி இருக்கின்ற பாட்டு. அந்தப் பாட்டில் ஆரியம் என்கின்ற சொல் எப்படி வருகின்றது என்றால், ஒரு காதலனும் காதலியும் பாலை வழியாக நடந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பாலை எப்படி இருக்கிறது. அந்தப் பாட்டில் நல்லோர் யார் கொல் அளியர் தாமே இந்த இரண்டு பேரும் நல்ல பிள்ளைகளாக இருக்கிறார்களே, யாரு?

ஆரியன் கயிறாடு பறையின் கால் பொரக் கலங்கி’

என்ற பாட்டு. அப்போதெல்லாம் கயிற்றின் மேல் கூத்தாடுகின்றவர்களுக்கு ஆரியர்கள் என்று சங்க காலத்தில் பெயர் இருந்திருக்கிறது. அந்தக் கயிற்றின் மேல் ஆடுகின்ற ஆரியன் கயிறாடு பறை; அவர்கள் கயிறு ஆடுகின்ற போது கீழே அடிக்கின்ற பறை போல இங்கே மூங்கில் காடுகளில் இருந்து சத்தம் வருகிறது.

இதில் நடந்து கொண்டு போயிருக்கிறார்களே ‘நல்லோர் யார் கொல் அளியர்’ என்று பெரும்பதுமனார் குறுந்தொகையை ஆங்கிலேயர் எழுதினார்களா என்று ஆளுநரை கேட்க வேண்டும். அது தெரியவில்லை. ஆரியம் என்கின்ற சொல் ஆங்கிலேயர் வந்த பிறகு வருகிறது என்றால் குறுந்தொகையில் அந்தச் சொல் இடம் பெற்றிருக்கிறதே எப்படி?

சரி, திராவிடம் என்ற அப்படி ஒரு சொல்லே இல்லை என்றால் எதற்காக ஆதி சங்கரர் சம்பந்தரைப் பார்த்து ‘திராவிட சிசு’ என்று சொன்னார் ?

எதற்காக ஆரியம் கண்டாய், தமிழன் கண்டாய் என்று தேவாரம் சொல்கிறது. எதற்காக மாணிக்கவாசகர் ஆரியம் என்கிற சொல்லைப் பயன்படுத்துகிறார்? ‘திராவிட சிசு’ என்று சொல்லும் போது, அப்படியானால் யார் அந்த திராவிடர்.?

அந்த திராவிடம் என்பது சரியா தவறா என்பதெல்லாம் வேறு. இவை எல்லாம் நான் சொல்லுகின்ற இலக்கியச் சான்றுகள்.

வரலாற்றில் இருந்து சொல்ல வேண்டும். நம்முடைய எடப்பாடி அவர்கள் சொல்வதைப் போல புராணங்களில் இருந்து அல்ல, வரலாற்றில் இருந்து, நம்முடைய வரலாற்று ஆசிரியர்கள் எழுதி இருப்பது அல்ல. பேராசிரியர் என்.சுப்பிரமணியன் அவருடைய ஹிஸ்டர் ஆப் இந்தியா 1964 இல் வந்தப் புத்தகம் அது.

அதனுடைய முதல் பகுதி, இரண்டாவது பகுதி 1969 இல் வந்தது. அரசாங்கத்தினுடைய சிறப்பு விருதைப் பெற்ற புத்தகம்.

ஹிஸ்டரி ஆப் இந்தியா அதில் பகுதி ஒன்று, மூன்றாவது அத்தியாயம். அதில் இந்தியாவின் மிகப் பெரும்பான்மையாகப் பேசப் படுகின்ற இனங்கள் இரண்டு, ஒன்று திராவிட இனம், இன்னொன்று ஆரிய இனம் என்கிறார்.

அவர் ஒன்றும் தி.மு.க.வின் உறுப்பினர் அல்ல. டாக்டர் கே.கே. பிள்ளை “தமிழக வரலாறும் பண்பாடும்” என்கின்ற நூலில் ஆரியம் - திராவிடம் பற்றி எழுதி இருக்கிறார்.

டாக்டர் இ.மா.ராசமாணிக்கனார் “தமிழக வரலாறும் பண்பாடும்” என்கின்ற நூலில் எழுதி இருக்கிறார். இன்னும் ஆயிரம் சான்றுகள் இருக்கின்றன.

நான் முதலில் சொன்னதைப் போல மிகத் தெளிவாக இருக்கின்ற ஒன்றை இல்லை என்று ஒருவர் ஆளுநராக இருக்கின்ற காரணத்தால் அவருக்கு விளம்பரமும் பிரச்சாரமும் இயல்பாக எந்தச் செலவும் இல்லாமல் கிடைத்து விடுகிறது. நமக்கு நேரம் முழுவதும் வீணாகிக் கொண்டிருக்கிறது.

**நெறியாளர்:-** நேரத்தை வீணடிக்கிறார் என்கிறீர்கள். இலக்கியச் சான்றுகள் ஆரியம் தொடர்பான குறிப்புகள் இருக்கு., திராவிடம் தொடர்பான குறிப்பும் இருக்கு , ஆங்கிலேயர்கள் வருவதற்கு முன்பே ஆரியம் திராவிடம் இருக்கிறது என்று கூறுகிறீர்கள். ஆளுநர் சொல்லக் கூடிய ஒரு கருத்து என்ன வென்றால் ஆரியம் திராவிடம் அப்படி என்கின்ற இந்த வேறுபாடே செயற்கையாக தவறாக வெள்ளைக்காரர்களால் உருவாக்கப்பட்ட ஒன்று. அப்படி என்ற ஒரு கோட்பாட்டுக்குள் இருந்து பேசுகிறார். அதனை பலரும் அம்பேத்கர் அவர்களை கூட மேற்கோள் காட்டி சொல்லக்கூடிய தன்மையை பார்க்கிறோம்.

**பேராசிரியர் சுப.வீரபாண்டியன்:** இதில் இரண்டு செய்திகள். இது ஆங்கிலேயர்கள் உருவாக்கியது என்றால், நீங்கள் ஏன் ஒரு ஏவுகணைக்கு ‘ஆரியபட்டா’ என்று பெயர் வைத்தீர்கள். ‘ஆரிய பட்டா’ என்று அரசாங்கம் ஏன் பெயர் வைத்தது?

அம்பேத்கர் அவர்கள் 1946 இல் who are suthras என்கிற புத்தகம் எழுதுகின்ற போது ஒரு குறிப்பைச் சொல்கிறார். அதில் இது ஒரு Myth சொல்வது உண்மை. அதனைச் சொல்கின்றவர்கள் அதற்குப் பின்னால் அம்பேத்கர் எழுதிய நூலில் ஒரு கட்டத்தில் ‘நான் கருதியதாக இல்லை. அது இந்த நாட்டின் வரலாற்றின் ஒரு பகுதி என்று சொல்கிறாரே அதற்கு இவர்கள் என்ன சொல்கிறார்கள். அல்லது இவர்கள் ஒரு புத்தகம் மட்டும் தான் படிப்பார்களா? அல்லது செலக்டிவ் அம்னீஷ்யா, இவர்களுக்குத் தேவையானதை சிந்தனையில் வைத்துக்கொண்டு மற்றதை மறந்து விடுவார்களா? அம்பேத்கரை மேற்கோள் காட்டுகின்ற இவர்கள். அம்பேத்கர் இந்து மதத்தைப் பற்றிச் சொல்லி இருப்பதை எல்லாம் ஆளுநர் ரவி அவர்கள் எடுத்துச் சொல்வாரா? அல்லது அதைப்பற்றி பேச அவர் தயார்தானா, நாங்கள் தயார்.

அம்பேத்கர் இந்து மதத்தைப் பற்றி, பார்ப்பனர் பார்ப்பனீயம் பற்றி அவர் பேசி இருக்கின்றதை பெரியாருக்கு கொஞ்சமும் குறைவில்லாமல் பேசி இருக்கிறார். 1927இல் டிசம்பர் 25 ஆம் தேதி மனுஸ்மிருதியை எரிக்கின்ற போது அம்பேத்கர் பேசிய பேச்சு இன்னமும் நெருப்பு பறக்கின்ற ஒரு உரை.

ஆகையினால் அம்பேத்கரை தேவையான ஏதோ ஒரு இடத்தில் அதற்கான கருத்தை அவரே மாற்றிக் கொண்ட பிறகு நாம் எப்படி பழைய கருத்தை மேற்கோள் காட்டக் கூடாது என்றால், பாரதிதாசன் 1925 க்கு முன்னால் பாடிய மயிலம் சுப்பிரமணியத் துதி அல்ல பாரதிதாசன். மாற்றம் வந்ததற்குப் பிறகு எது என்பதை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதேபோல 1950 களில் கண்ணதாசனின் கருத்துகள் தான் கடைசி வரைக்கும் அவருடன் இருந்தன என்று சொல்ல முடியாது. அவர் பின்னால் வந்ததற்குப் பிறகு பழைய கருத்தை எடுத்துக் கொள்ளக் கூடாது.

**நெறியாளர்:** ஆளுநர் ஒரு விமர்சனத்தை தொடங்கி வைக்கிறார். அ தற்கு டி.ஆர்.பாலு கண்டனம் தெரிவிக்கிறார். தி.மு.க. கடும் எதிர்வினையாற்றுகிறது. திருமாவளவன் எதிர்வினை யாற்றுகிறார். மற்றவர்கள் பேசுகிறார்கள். அ.தி.மு.க. இதனை எதிர்வினை என்று எடுத்துக் கொண்டால். இரண்டு கோணங்கள் இருக்கின்றது. ஒன்று சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை திராவிட இயக்க ஆட்சியாளர்கள் மறைத்து விட்டார்கள். அவர்களுக்குரிய மரியாதையை தரவில்லை என்று சொல்லப்படும் போது, தமிழ் நாட்டில் அது தி.மு.க. மேல் மட்டும் அல்ல அ.தி.மு.க. மேலேயும் வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டு ஆளுநர் வைப்பது. இன்னொன்று திராவிடம் பற்றிய கருத்து. அதில் அ.தி.மு.க. ஆளுநர் குற்றச்சாட்டை மறுக்கவும் இல்லை. அவரை கண்டிக்கவும் இல்லை. இந்த ஆய்வு என் ஏரியா இல்லை என்று எடப்பாடி பழனிச்சாமி சொல்வது இதில் ஒரு ஆனஸ்ட்டா இல்லை அவருக்கு இன்ட்ரஸ்ட் இல்லை அப்படி என்று புரிந்து கொள்வதா அது சார்ந்த உங்கள் பார்வை?

**பேராசிரியர் சுப.வீரபாண்டியன்:** அமைச்சர் உதயநிதி அவர்கள் சொல்லி இருப்பதுபோல் அவருக்கு அவ்வளவு பயமா? அவருக்கு ஆளுநர் சொன்னதற்கு கருத்து சொல்வதற்கு கூட அத்தனை அச்சம் இருக்கிறது என்று தான் நான் கருதுகிறேன். எல்லோருக்கும் எல்லாவற்றையும் தெரிந்து இருக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. இதனால் எடப்பாடியின் அறிவு குறைவானது என்று கூட நான் எடுத்துச் சொல்லவில்லை. அவர் ஒரு கட்சியின் தலைவராக இருக்கிறார். அதுவும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கட்சியின் பொதுச்செயலாளராக இருக்கின்ற எடப்பாடி பழனிச்சாமி அடிப்படை திராவிடம் பற்றி எனக்கு எதையுமே தெரியாது என்று சொல்வது அவருக்கு அல்ல அந்தக் கட்சிகே அவமானம் என்று தான் நான் கருதுகிறேன். அடிப்படையில் சில செய்திகளையாவது அவர் தெரிந்து கொண்டிருக்க வேண்டும்.

**நெறியாளர்:** இவையெல்லாம் ஆய்வாளர் பேச வேண்டியது . நான் ஆய்வாளர் அல்ல அப்படி என்று சொல்கின்ற போது அவரிடத்தில் ஒரு நேர்மை இருக்கிறது; தெரியாததை பேசுவதற்கோ அவர் தயாராக இல்லை.

**பேராசிரியர் சுப.வீரபாண்டியன்:** உண்மைதான். நான் முதலிலே கூறினேன். அந்த அறியாமை என்பது அரைகுறை தவறானதை விட அறியாமையே மேல் என்பதை நான் எடுத்த உடனே சொன்னேன். ஆனால் அறியாமை அல்ல. எடப்பாடி அவர்கள் அப்படி எதுவுமே தெரியாமல் வாயில் விரலை வைத்தால் கடிக்கத் தெரியாது என்றெல்லாம் என்னால் நம்ப முடியாது. இந்த வம்பு நமக்கு வேண்டாம் என்று அவர் கருதிக் கொண்டுதான், தனக்கு எதுவும் தெரியாது என்று சொல்வதாகத்தான் நான் நினைக்கிறேன்.

**நெறியாளர்:** பேராசிரியர்... உங்களின் நிறைவு கருத்து?

**பேராசிரியர் சுப. வீரபாண்டியன்:** அவர்கள் திராவிடத்தை மட்டும் சொல்லவில்லை. ஆரியமும் சேர்த்துத்தான். திராவிடம் ஆரியம் என்கின்ற பிரிவே பொய்யானது. அப்போ ஆரியம் என்பதும் இல்லை என்று தான் ஆளுநர் சொல்கிறார். திராவிடத்திற்கு ஆயிரம் சான்றுகளை நான் தர முடியும். அவர்கள் குறிப்பிட்டபடி ஆரியமும் இல்லை என்று அவர்கள் சொல்லத் தயாரா? அப்படியானால் அதற்காக திலகர் புத்தகத்தில் இருந்து கோல்வால்கர் புத்தகங்களிலிருந்து நாங்கள் எடுத்து காட்டுகிறோம்.

ஆரியத்தை பற்றி நீங்களே சொல்லி இருக்கிறீர்கள். இல்லை என்று சொல்ல முடியுமா? ஏனென்றால் நான் மிகவும் மதிப்போடு சொல்கிறேன் வரலாற்றை. 1944 ஜூன் அல்ல சேலத்தில் ஆகஸ்டில் நடந்தது, அதில் பொப்பிலி அரசரும், பனகல் அரசரும் கலந்து கொண்டார்கள் என்கிற புதிய செய்தியை இன்றைக்கு பாலகணபதி அவர்கள் மூலம் தான், நான் அறிந்து கொள்கிறேன்.

1920 இல் இறந்துபோன பனகல்அரசர் 1944 இல் எப்படி வந்து கலந்துகொண்டார் என்று எனக்குத் தெரியவில்லை. எனவே இவர்களின் வரலாற்று அறிவு இவ்வளவு கூர்மையாக இருக்குமானால் எனக்கு உண்மையாக கவர்னர் மட்டுமல்ல இப்படிப்பட்ட வரலாற்று அறிஞர்களோடும் நாம் விவாதிக்க வேண்டி இருக்கிறது என்று ஒரு வருத்தமாக இருக்கிறது. இது ஒரு பக்கம்.

இரண்டாவது நான் கேட்ட எந்தக் கேள்விக்கும் பாலகணபதி விடை சொல்லவில்லை. அம்பேத்கர் எந்தப் புத்தகத்தில் எழுதி இருக்கிறார் என்று கேட்டேன் சொல்லவில்லை. ஆரியம் திராவிடம் இரண்டும் மாயை என்றால் ஏன் ஆரியத்தைப் பற்றி தொடர்ந்து எல்லோரும் சங்க இலக்கியத்தில் இருந்து பேசுகிறீர்கள்.

ஏன் திராவிட சிசு என்று சொல்கிறீர்கள். இரண்டு சொற்களும் ஆங்கிலேயர்கள் வருவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இங்கே இருக்கிறதே என்ன காரணம். நான் சோழனுடைய அதாவது பெருவுடையார் கோயில் காலத்தில் சோழர்களின் பாணியர் கல்வெட்டில் தமிழ் நால்வர் தமிழ் பாடினர். மூவர் ஆரியம் பாடினர் . என்ற கல்வெட்டையும் எடுத்து காட்டினேன் எதற்கும் பதில் சொல்லவில்லை என்று சொன்னால் பிறகு நான் என்ன சொல்வது?

எனவே அடிப்படையாக ஒன்றைச் சொல்கிறேன், ஆரியம் திராவிடம் பற்றி வேறு எதுவும் இன்றைக்கு பேசுவதற்கு இல்லை என்றால் அதைப்பற்றி அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆரியர் திராவிடர் பிரச்சினை என்பது இயல்பாக எல்லா வரலாற்று நூல்களிலும் இருக்கின்றன. புராணத்தில் அல்ல, வரலாற்று நூல்களில் இருக்கின்றன. அழுத்தமாக இருக்கிறது பதிவு.

இவ்வாறு பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அவர்கள் பேட்டி அளித்தார்.



ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குன்றத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கெருகம்பாக்கம் ஊராட்சியில் ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம் தலைமையில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழா மற்றும் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனை பிரசார பொதுக்கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் சட்டமன்ற அரசு தலைமை கொறடா கோவி. செழியன் மற்றும் தலைமை கழக பேச்சாளர் சைதை சாதிக் ஆகியோர் கலந்துக்கொண்டு உரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். அருகில் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், ஒன்றியக் குழு உறுப்பினர் சுதாகர், வசிகரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருநின்றவூர் நகராட்சியில் உள்ள 22மற்றும்24 ஆகிய வார்டுகளில் உள்ள அரசு தொடக்கப்பள்ளியில் ஆவடி சட்டமன்ற மேம்பாட்டு நிதியிலிருந்து 34 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக இரண்டு கூடுதல் வகுப்பறை கட்டிடங்களை முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ திறந்து வைத்து பள்ளிப் மாணவர்களுக்கு இனிப்பு வழங்கினார். இதில் நகர மன்றத் தலைவர் உஷாராணி ரவி, ஆணையர் சுரேந்தர் ஷா தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், நகர மன்ற துணை தலைவர் சரளா நாகராஜ், மாநகர பொறுப்பாளர் சண்பிராகஷ், பகுதிச் செயலாளர் ஜி.ராஜேந்திரன் தலைமை ஆசிரியர் அஞ்சலி தேவி, நகர கழக நிர்வாகிகள் அன்பழகன், எஸ்.கமலக்கண்ணன், நாகராஜ், ரவி, பாபு கவுன்சிலர்கள் சசிகலாஜீவானந்தம், தங்கராஜ், டி.வி.சுரேஷ்குமார், பி.எல். ஆர்.யோகா, எம்.கிருஷ்ணன், ஜெயக்குமார், ஜீவானந்தம் அசோக்குமார், சலீம், மாதவன், பாபு மற்றும் பிரவீன்குமார், தங்கமணி, பி.டி.சி.மணி, வி.மகேஷ்குமார், சுதர்சனம், பிரசன்னா, உதயநிதி, சேகர், சுபாஷ், சூரிய, பட்டாணி கார்த்திக் உள்பட பலர் உள்ளனர்.